**அரியலூர் மாவட்ட வன அலுவலரின் செயல்முறை நடவடிக்கைகள்**
**பிறப்பிப்பவர்: முனைவர் த.இளங்கோவன் எம்.காம்.பிஎட்,**
**மாவட்ட வன அலுவலர்**

செ.மு.ஆ.எண்.ப/1112/2022 நாள்:28.07.2023

**பொருள்** : **பணி** – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு. செ.கதிரவன், இளநிலை உதவியாளர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது - பணியினை வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை** :
1) அரசாணை (நிலை) எண்:18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புதுறை நாள்:02.01.2020
2) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண்.w2/18995/2015 நாள்.21.03.2022.
3) தலைமை வனப்பாதுகாவலர், திருச்சி ந.க.எண்.ப1/4278/2021 நாள்.21.03.2022.
4) மாவட்ட வன அலுவலர்,அரியலூர் ந.க.எண்.1112/2022/ப நாள்.31.03.2022.
5) அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை நாள்:08.03.2023 (முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண்.ண2/19226/2022 நாள்.12.06.2023.)
6) தலைமை வனப்பாதுகாவலர், திருச்சி ந.க.எண்.ப1/8380/2023 நாள்.20.06.2023

******

**ஆணை:**

பார்வை 2 மற்றும் 3-ல் காணும் கடிதங்களின்படி காலஞ்சென்ற சி.செல்வம், வனக்காப்பாளரின் மகன் திரு.செ.கதிரவன் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு அரியலூர் வனக்கோட்டத்தில் 31.03.2022 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். தனியரின் தற்காலிக பணியானது பார்வை 5-ல் காணும் அரசாணையின்படி சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing Authority) அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப்பணியாளரின் பணியினை வரன்முறை செய்திடுமாறு வழங்கப்பட்டுள்ள அறிவுரையின் படி மேற்படி பணியாளர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 31.03.2022 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும், மூன்றாண்டு கால தொடர் பணிக்குட்பட்ட இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்து தகுதிகாண் பருவத்தில் வைத்த நாள். |
|---|---|---|---|
| 1 | திரு.செ.கதிரவன், இளநிலைஉதவியாளர் | 31.03.2022 பிற்பகல் | 31.03.2022 பிற்பகல் |

மாவட்ட வன அலுவலர்,
அரியலூர் வனக்கோட்டம்,
அரியலூர்.

பெறுநர்:
திரு.செ.கதிரவன், இளநிலை உதவியாளர்
மாவட்ட வன அலுவலகம், அரியலூர்.

நகல்: பணிப்பதிவேடு
நகல்: செயல்முறை ஆணை இருப்பு கோப்பிற்கு